DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 200/2024

Prosecution Witness - P.W. 12

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராஜசேகர் |
| Father's Name | : | Viswambharan |
| Village | : | Munchirai |
| Taluk | : | Killiyoor |
| Calling | : | SI of Police |
| Age | : | 59 |
| Date | : | 22.10.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

22.10.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மண்டைகாடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்னால் குலசேகரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 01.01.2024 ஆம் தேதி நிலைய தலைமை காவலர் மகேஷ் என்பவர் பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்த குலசேகரம் காவல் நிலைய குற்ற எண். 3/2024 பிரிவு 294(b), 323, 324, 506(ii) இ.த.ச. வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்

கொண்டு, அன்றைய தினம் இரவு நேரம் ஆனதால் 02.01.2024 ஆம் தேதி காலை 5.30 மணிக்கு குலசேகரம் காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு சம்பவ இடமான குலசேகரம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் கிழக்கே குலசேகரம் - பொன்மனை ரோட்டில் மங்கலம் புளியமூடு ஜங்சனில் உள்ள பயணிகள் நிழற்குடைக்கு காலை 6.00 மணிக்கு சென்று, சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு சாட்சிகள் சுரேஷ்குமார், ரவீந்திரன் நாயர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் அதே சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 2 பார்வை மகஜர் அப்போது என்னால் தயார் செய்யப்பட்டதுதான். என்னிடம் காட்டப்படும் வரைபடம் நான் தயார் செய்ததுதான். **அது அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதே இடத்தில் வைத்து அதே சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். அதன்பிறகு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் ஷைனி, ரமேஷ் மற்றும் முருகன் ஆகியோர்களை சம்பவ இடத்தில் வைத்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்தும், சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும், எனது ரகசிய விசாரணையிலும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை மங்கலம், பொன்மனை, கிழக்கன்பாலம், பெருஞ்சாணி ஆகிய இடங்களில் தேடி வந்த நிலையில் 02.01.2024 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு வலியாற்றுமுகம் ஜங்சனில் வைத்து காரணம் கூறி எதிரியை கைது செய்தேன். அந்த தகவலை அவர்களுடைய உறவினர்களுக்கு தெரிவித்தும், உச்ச

நீதிமன்ற கட்டளையை பின்பற்றியும் கைது செய்து எதிரியை சாட்சிகளான ரஞ்சித் மற்றும் மோகன்பிரபு ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்தேன். அப்போது எதிரி எந்தவித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தையும் இல்லாமல் தானாக முன் வந்து அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம்அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் போது இரும்பு சாவியை மங்கலத்தை நோக்கி போகும் வழியில் புதரில் தூக்கி எறிந்து விட்டதாகவும், தன்னை அழைத்து சென்றால் அந்த இரும்பு சாவியை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அதில் எதிரியின் கையொப்பமும், ரஞ்சித் மற்றும் மோகன்பிரபு ஆகியோரின் கையொப்பத்தை பெற்றேன். எதிரி கூறியதின் பேரில் எதிரியையும், சாட்சிகளையும் அழைத்துக்கொண்டு மங்கலம் ஜங்சனில் புதரிலிருந்து எடுத்துஆஜர் செய்த இரும்பு சாவியை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சியில் அந்த சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். அந்த சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 சாவி அப்போது கைப்பற்றப்பட்டதுதான். பிறகு எதிரியையும், வழக்கு பொருட்களையும் காலை 11.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து, எதிரியை திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவிடம் ஒப்படைத்தேன். அதன்பிறகு இந்த வழக்கில் Intimation மற்றும் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மகேஷ் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தகுந்த வழிக் காவலடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன்பிறகு நாகர்கோவில் அரசு

மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்து காயம் பெற்றிருந்த முத்துபிள்ளை என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் புகார்தாரரான அவருடைய மனைவி ராஜேஸ்வரி மற்றும் அந்த புகாரில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்திருந்த ஜினி என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.01.2024 ஆம் தேதி இந்த வழக்கில் காயம்பட்டிருந்த முத்துபிள்ளை இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின்பேரில் முதல் தகவல் அறிக்கையில் வழக்கின் சட்டபிரிவை 294(b), 323, 324, 506(ii) இ.த.ச. விலிருந்து 294(b), 302 இ.த.ச வாக மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு சமர்பித்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. **அது அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன்பிறகு வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் திரு.பாலமுருகன் அவர்களிடம் மேல் விசாரணைக்காக ஒப்படைத்தேன். இந்த வழக்கின் அ.சா. 5 ரமேஷ் சொன்ன விவரங்களைதான் வாக்குமூலமாக நான் பதிவு செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>**

எத்தனை மணிக்கு காயம் பட்ட நபர் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் வந்தது என்றால் 13.01.2024 ஆம் தேதி அதிகாலை 5.00 மணிக்கு தகவல் வந்தது. அந்த தகவலை எழுத்து மூலமாக எங்கள் காவல் நிலையத்திற்கு சொன்னது யார் என்றால் ஆசாரிபள்ளம் வெளிநோயாளிகள் பிரிவிலிருலிந்து போன் மூலமாக சொன்னார்கள். அவ்வாறு போன் மூலமாக தகவல் வந்ததாக சட்டப்பிரிவு மாற்று அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திலிருந்து யார்

மூலமாக சட்ட பிரிவு மாற்று அறிக்கையை எத்தனை மணிக்கு யார் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் 13.01.2024 அன்று காலை 10.00 மணிக்கு விரைவு தபாலாக பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி. கலா மூலமாக அனுப்பி வைத்தேன். அதற்கு கடவு சீட்டு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். காலை 5.00 மணிக்கு தகவல் கிடைத்தபோது 10.00 மணி வரையில் காலம் எடுத்தது எதற்காக என்றால் மருத்துவமனைக்கு சென்று எழுத்துமூலமான Death Intimation பெற்று அதன்பிறகு அந்த அறிக்கை தயார் செய்து அனுப்புதற்கு காலதாமதம் ஆனது. அந்த அறிக்கையுடன் மருத்துவமனையிலிருந்து பெற்ற Death Intimation சேர்த்து அனுப்பினேனா என்றால் ஆமாம். அந்த விவரம் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. Death Intimation ஐ பெறுவதற்காக கால தாமதம் ஆனது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் Death Intimation ஐ நான் மறைத்து விட்டேன் என்றாலும் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லும் சாவியில் குத்தி கிழிக்கும்போது இருக்கக்கூடிய சதை துணுக்குகளோ, இரத்தமோ காணப்பட்டதா என்றால் இல்லை. நான் விசாரித்ததாக சொல்லும் ஷைனியின் கணவர் பெயர் ரஞ்சித்தா என்றால் ஆமாம். அவருடைய ஊர் மலைஇடிஞ்சான்விளை என்றால் சரிதான். பெருஞ்சாணி மலைஇடிஞ்சான்விளை. எதிரியை கைது செய்து நான் பெற்றதாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த ரஞ்சித் தான் சாட்சியாக காண்ப்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஷைனியை விசாரித்தபோது தான் கணவர் வீட்டில் வசித்து வருவதாகவும், அந்த வீட்டு வேலைகளை செய்து வருவதாகவும் கூறியுள்ளார் என்றால் சரிதான். அன்றைய தினம் பெற்றோர் வீட்டில்

இருந்துள்ளார். அவர் அறுவை சிகிச்சை செய்து கொண்டு மருத்துவ ஓய்வில் தன்னுடைய பெற்றோர் வீட்டில் இருந்ததாக நான் விசாரிக்கும்போது கூறவில்லை என்றால் சரிதான். பெற்றோர் வீட்டில் இருந்ததாக சொல்லியுள்ளார். அனிஷ் தனது கையில் இருந்த சாவியால் தனது அப்பாவின் கண் புருவத்தில் குத்தினார் என்று ஷைனி என்னிடம் வாக்குமூலம் கொடுத்ததாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். ஷைனியை நான் விசாரிக்கும்போது தரையில் கிடந்த சாவியை எடுத்து அனீஷ் குத்தியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். கையிலிருந்த சாவியால் குத்தியதாக சொல்லியுள்ளார். அனீஷ் கையால் தனது அப்பாவை கீழே தள்ளினார் என்ற விவரத்தையும் ஷைனியை விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளார். நான் ஷைனியை விசாரிக்கும்போது அனீஷ் தனது அப்பாவின் தலையை பிடித்து நான்கு புறமும் சுவரில் மோதினார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஷைனியை விசாரிக்கும்போது தனது அப்பாவை அனீஷ் காலால் நெஞ்சில் உதைத்து தள்ளியதாக சொல்லவில்லை என்றால் காலால் உதைத்ததாக சொல்லியுள்ளார். நெஞ்சில் உதைத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. அதேபோல சிமெண்ட் திண்டில் முட்டியதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஷைனியை விசாரித்தபோது கண் புருவத்திலிருந்து வடிந்திருந்த இரத்தம் அப்பாவின் டிசர்ட்டிலும், லுங்கியிலும் பட்டிருந்த விவரத்தை சொன்னாரா என்றால் இல்லை. புகார் கொடுத்த ராஜேஸ்வரி சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து ஒரு ஆட்டோவில் காயம் பட்ட நபரை குலசேகரம் மருத்துவமனைக்கு கொண்டு

சென்றதாக என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் ஆமாம். அந்த ஆட்டோவின் எண் என்ன என்று தெரிந்து கொண்டு, அந்த ஆட்டோ ஓட்டிய நபரை விசாரித்தேனா என்றால் இல்லை. அது அந்த வழியாக சென்ற ஆட்டோ என்று மொட்டையாக கூறினார்கள். எனது விசாரணையில் குலசேகரம் காவல் நிலைய எல்லைக்குள் டேவிட் மருத்துவமனைக்கு காயம் பட்ட நபரை கொண்டு சென்றதாக தெரிய வந்ததா என்றால் தெரிய வந்தது. டேவிட் மருத்துவமனை மருத்துவரை விசாரித்தேனா என்றால் அந்த மருத்துவமனையில் அவருக்கு எந்த சிகிச்சையும் அளிக்கப்படவில்லை, அந்த மருத்துவமனையின் பதிவேட்டிலும் அவருக்கு சிகிச்சை அளித்ததாக எந்த குறிப்பும் இல்லை. அதனால் மருத்துவரை விசாரிக்கவில்லை. ஒரு குற்ற சம்பவத்தில் காயம் பட்ட நபரை ஒரு மருத்துவமனைக்கு அழைத்து சென்றால் அது குறித்து அந்த மருத்துவமனையில் பதிவு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு தெரிந்தபோதும் அந்த மருத்துவமனை மருத்துவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் அந்த மருத்துவமனையில் எந்த சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. அவரை உடனடியாக ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அவ்வாறு சொல்லி அறிவுரை கொடுத்தது யார் என்றால் மருத்துவமனை மருத்துவர்கள் சொல்லியிருப்பார்கள். டேவிட் மருத்துவமனையில் காயம்பட்ட நபரை அனுமதித்தார்கள் என்றாலும் அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது என்றாலும் அப்போது சம்பவம் நடந்த இடமாக வேறு ஒரு இடத்தையும், சம்பவம் நடந்ததாக வேறு விதத்தையும், பதிவு செய்யப்பட்டிருந்தது என்றாலும் அதை

மறைப்பதற்காக தற்போது அது குறித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆட்டோ டிரைவரை நான் விசாரித்தேன் என்றாலும் அவர் காயம்பட்ட நபரை வேறு ஒரு இடத்திலிருந்து மருத்துவமனைக்கு கூட்டி வந்ததாக சொல்லியதால், அவருடைய வாக்குமூலத்தை மறைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தலைமை காவலர் மகேஷ்ஷை விசாரித்தபோது காயம்பட்ட நபர் மயக்க நிலையில் இருந்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். எழுத முடியாத நிலையில் இருந்தார் என்று சொல்லியுள்ளார். எழுத முடியாத நிலையில் இருந்தார் என சொல்லியுள்ளதால் அவர் பேச முடியாத நிலையில்தான் இருந்தார் என்றுதான் எடுத்து கொள்ள முடியும் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் கொடுத்த வாக்குமூலத்தை மறைத்துவிட்டு வேறு விதத்தில் சம்பவம் நடந்ததாக பொய்யாக புகார் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதை நான் முறையாக அந்த தலைமை காவலரிடம் விசாரித்து அறிந்து கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. குலசேகரம் மருத்துவமனையிலிருந்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் காயம்பட்ட நபரை கொண்டு சென்றதாக என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் ஆமாம். தனியார் ஆம்புலன்சில் கொண்டு செல்லப்பட்டார். அந்த தனியார் ஆம்புலன்ஸை ஓட்டிச் சென்ற நபரையோ, அதில் இருந்த மருத்துவ உதவியாளரையோ விசாரித்தேனா என்றால் இல்லை. அவ்வாறு கொண்டு சென்ற ஆம்புலன்ஸ் எது என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. டேவிட் மருத்துவமனையிலும், மருத்துவகல்லூரி மருத்துவமனையிலும் அந்த ஆம்புலன்ஸ்

குறித்தான பதிவு இருக்குமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த ஆம்புலன்ஸில் உள்ள குறிப்பு வேறு விதமான சம்பவத்தை காட்டும் என்பதால் அது குறித்தான விவரங்களை நான் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. மங்கலம் ஜங்சன் ரோடு குலசேகரத்திலிருந்து மங்கலம் நோக்கி மேற்கிலிருந்து கிழக்காக செல்கிறது என்றால் சரிதான். மங்கலம் ஜங்சனில் ரோட்டிற்கு வடக்கு பக்கம் ஒரு வாய்க்கால் போகிறது என்றால் சரிதான். அந்த வாய்க்காலுக்கு மேல் தென்வடலாக ஒரு பாலம் செல்கிறது என்றால் சரிதான். அந்த ஜங்சனில் கிழக்கு எல்லையிலிருந்து எத்தனை அடி தூரத்தில் சாவி இருந்ததாக சொல்லும் புதர் இருந்தது என்றால் சுமார் 10 அடி தூரம் இருக்கும். அது ரோட்டிற்கு வடக்கு பக்கமா, தெற்கு பக்கமா என்றால் வடக்கு பக்கம் இருந்தது. மங்கலம் ஜங்சனில் பயணிகள் நிழற்குடை உள்ளதா என்றால் உள்ளது. எதிரியை வலியாற்றுமுகம் ஜங்சனில் வைத்து கைது செய்ததாக நான் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் சாவி எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. 2 வது சாட்சி ஷைனியின் கணவர் ரஞ்சித்தின் ஏற்பாட்டில் அவருடைய நண்பர் மோகன்பிரபுவுடன் சேர்ந்து இந்த ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பிற்பாடு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஷைனியின் கணவர் ரஞ்சித்தின் வீடு மங்கலம் ஜங்சனிலிருந்து கிழக்கு பக்கம் 5 கிலோ மீட்டரில் பெருஞ்சாணி அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தை சுற்றி நிறைய கடைகளும், வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளில் இருந்த நபர்களை

விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர்கள் யாரும் சம்பவத்தை பார்த்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னார்கள். ஆனால் சாட்சியாக வருவதற்கு தயாராக இல்லை. அவ்வாறு பார்த்ததாக சொன்னது யார் யார் என்றால் மோகன்நாயர், சுரேஷ் ஆகியோர் சொன்னார்கள். சாட்சி சொல்வதற்கு மறுத்ததால் அவர்கள் மீது குற்ற நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் போதுமான இதர சாட்சிகள் இருந்ததால் அந்த நடவடிக்கை எடுக்கவில்லை. சம்பவ இடத்திற்கு அருகே குடியிருந்த நபர்கள் யாரும் சம்பவம் நடந்ததாக சொல்லவில்லை என்றால் அவர்கள் வாக்குமூலத்தை நான் பதிவு செய்யவில்லை என்றாலும் அதை மறைப்பதற்காக தற்போது அவர்கள் சம்பவத்தை பார்த்ததாகவும், ஆனால் சாட்சியம் சொல்ல தயாராக இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் இருந்த மற்ற சாட்சிகள் சம்பவத்தை பார்த்ததாக சொல்லியுள்ளார்கள். அதை பதிவு செய்துள்ளேன். நான் சம்பவத்தை பார்த்ததாக சொல்லும் சாட்சிகள் யாரும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அனீஷின் தகப்பனார் பெயர் என்ன என்றால் கணேசன். காவல் நிலைய எல்லைக்குள் நடந்த கொலைகள் மற்றும் அதற்கான தண்டனை விவரங்கள் எங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்த முத்துபிள்ளை மீது எங்கள் காவல் நிலையத்தில் கொலை வழக்கு ஒன்று பதிவாகி S.C. 203/2001 ல் அவருக்கு தண்டனை கிடைத்துள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **அது எ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

முத்துபிள்ளைக்கு தண்டனை கொடுக்கப்பட்ட வழக்கில் புகார் அளித்து சாட்சியம் அளித்துள்ள கணேசனின் மகனான அனீஷ்ஷை பழிவாங்குவதற்காக வழக்கை ஜோடிப்பதற்கு நானும் துணை புரிந்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் காயம்பட்ட நபரின் வாக்குமூலம், குலசேகரம் டேவிட் மருத்துவமனை மருத்துவரின் வாக்குமூலம், சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு கொண்டு சென்ற ஆட்டோ டிரைவரின் வாக்குமூலம் மற்றும் குலசேகரம் மருத்துவமனையிலிருந்து ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற ஆம்புலன்ஸ் டிரைவர் மற்றும் மருத்துவ உதவியாளர் வாக்குமூலங்கள் ஆகியவை மறைக்கப்பட்டு வழக்கு பொய் என்று தெரிந்து கொண்டே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.